[வலைப்பின்னல் மாற்று முறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை: ரூபா 9 . 00** **தபாற் செலவு: ரூபா 3 . 50**

**1999 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்**

[1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி அத்தாசிப் படுத்தப்பட்டது.]

ச.வ. – ஓ. 33/99

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

1. இச்சட்டம் 1999 ஆம் ஆண்டுன் 47 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1979 ஆம் ஆண் டின் 15 ஆம் இலக்கச் சட்டத் தின் 303 ஆம் 304 ஆம் பிரிவு களை மாற்றீடு செய்தல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம், 304 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக் குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இட்டப்படுகின்றன

"நிறுத்தி வைக்கப்படும் மறியற்றண்ட னைத் தீர்ப்பு.

303. (1) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நீதிமன்றமொன்று தவறாளரொருவக்கு ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பளிப்ப தன்மேல், பின்வருவனவற்றைக் கவனத்திற் கொண்டு அச்சூழ்நிலைகளில் தண்டனைத் தீர்ப்பு முழுவதையும் அல்லது அதன் பாகத்தை நிறுத்தி வைக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல் தோதானதென எழுத்தில் கூறப்படவேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றம் திருப்திப்படின், அது அவ்வாறு ஆக்கலாம் :-

(அ) எத்தவறு தொடர்பில் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்படுகின்றதோ அத்தவறுக்கு விதித் துரைக்கப்பட்ட ஆகக்கூடிய தண்டம் ;

(ஆ) தவறின் தன்மையும் பாரதூரமும் ;

(இ) தவறுக்காகத் தவறாளரின் குற்றத்தன்மையும் பொறுப்புடைமையின் அளவும் ;

(ஈ) தவறாளரின் முன்னைய பண்பு ;

(உ) தவறு புரியப்பட்டமையிலிருந்து நேரடியாக விளைகின்ற ஏதேனும் ஊறுபாடு, நட்டம் அல்லது சேதம் ;

(ஊ) தவறாளர் தொடர்பாக ஏதேனும் குற்றத்தை அதிகரிக்கின்ற அல்லது குற்றத்தைத் தணிக்கின்ற காரணி உள்ளமை;

(எ) சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் நீதியாகவுள்ள ஓர் அளக்கும் ஒரு முறையிலும் தவறாளரைத் தண்டிக்க வேண்டிய தேவை ;

(ஏ) இதேபோன்ற அல்லது இதையொத்த தவறுகளைப் புரிவதிலிருந்து தவறாளரை அல்லது வேறு ஆட்களைத் தடுப்பதற்கான தேவை ;

(ஐ) தவறாளர் எவ்வகையினதான தன் நடத்தையில் ஈடுபட்டிருந்தாரோ, அவ்வகையினதான நடத்தை நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படுவதனை வெளிப் படுத்துவதற்கான தேவை ;

(ஒ) உத்தரித்தவரை அல்லது சமுதாயத்தைத் தவறாளரிடமிருந்து பாதுகாப்பதற்கான தேவை ;

(ஓ) தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் தவறுக்குத் தாம் குற்றவாளியெனக் கூறியிருப்பதுடன் அத்தகைய ஆள் பயபக்தியாகவும் உண்மையாகவும் இரக்கப் படுகின்றார் என்ற நிகழ்வு ; அல்லது

(ஔ) மேலேயுள்ளவற்றுள் இரண்டின் அல்லது அதற்கதிகமானவற்றின் சேர்க்கையும்.

(2)(அ) எத்தவறு தொடர்பில் தண்டனைத்தீர்ப்பு விதிக்கப் படுகின்றதோ அத்தவறுக்காகச் சட்டத்தினால் கட்டாயமான குறைந்தபட்ச மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றும் விதித்துரைக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(ஆ) நிறுத்திவைக்கப்பட்டிராத காலப்பகுதியொன்றுக் கான மறியற்றண்டனையை தவறாளர் அனுபவித் துக் கொண்டிருப்பின் அல்லது அனுபவிக்க வேண்டியவராகவிருப்பின் ; அல்லது

(இ) தவறளார் நன்னடத்தை பாதுகாவல் கட்டளைக்கு அல்லது நிபந்தனைகளுடனான விடுதலைக்கு அல்லது விடுப்புக்கு அமைந்தவராகவிருந்தபோது தவறானது புரியப்பட்டிருப்பின் ; அல்லது

(ஈ) விதிக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலம் அல்லது தவறாளர் அதே வழக்கு நடவடிக்கைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகளுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து கூட்டுமொத்த மறியற் றண்டனைக் காலங்கள் இரண்டாண்டுகளை விஞ்சி யிருப்பின்.

மறியற்றண்டனைத் தீர்ப்பை நிறுத்திவைக்கின்ற கட்டளையொன்றை நீதிமன்றமொன்று ஆக்கு தலாகாது.

(3) (இதனகத்துப்பின்னர் “தொழிற்படு காலப்பகுதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரு தண்டனைத் தீர்ப்பின் முழுமையும் அல்லது அதன் ஏதேனும் பாகம் எக்காலப்பகுதிக்கு நிறுத்தி வைக்கப்படக்கூடுமோ அக்காலப்பகுதியானது, தண்டனைத் தீர்ப்பின் முழுமையை அல்லது அதன் பாகத்தை நிறுத்தி வைக்கின்ற கட்டளையை ஆக்குகின்றபோது நீதிமன்றத்தினால் :

(அ) தீர்மானிக்கப்படுதல் வேண்டும் அத்துடன் ;

(ஆ) குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

ஆயின் அத்தகைய காலப்பகுதியானது, தண்டனைத் தீர்ப்பின் முழுமையை அல்லது அதன் பாகத்தை நிறுத்திவைக்கின்ற கட்டளைத் தேதியிலிருந்து

ஐந்தாண்டுக்குக் குறைவானதாகவிருத்தலாகாது.

(4) நிறுத்தி வைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப் பட்ட தவறாளரொருவர் :

(அ) தொழிற்படு காலப்பகுதியின்போது, தவறாளர் எந்தக் தவறுக்கான நியதிச்சட்டமுறையான தண்டம் மறியற்றண்டனையாகவுள்ளதோ அல்லது அதனை உள்ளடக்குகின்றதாகவுள்ளதோ அந்த இன்னொரு தவறைப் புரிந்தாலொழியவும் ; அத்துடன்

(ஆ) (13) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையை நீதிமன்றம் ஆக்கினாலொழியவும் ;

நிறுத்திவைக்கப்பட்ட மறியற்றண்டனையின் ஏதேனும் பாகத்தை ஆனுபவித்தலாகாது.

(5) தொழிற்படு காலப்பகுதியானது, தண்டனைத் தீர்ப்பின் முழுமையை அல்லது பாகத்தை நிறுத்திவைக்கின்ற கட்டளைத் தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

(6) தொழிற்படு காலப்பகுதியின்போது தவறாளர் ஒருவருக்கு தொழிற்படு காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர்புரியப்பட்ட இன்னொரு தவறுக்காக மறியற்றண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படின், தவறாளர் அந்தத் தண்டனைத் தீர்ப்பை அனுபவித்திருக்கையில் தொழிற்படு காலப்பகுதி தொடர்ந்து கழிந்துபோகின்றது.

(7) நிறுத்திவைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப் பட்டதவறாளரொருவர், தொழிற்படு காலப்பகுதி முடி வுற்றதன் மேல் தண்டனைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) நிறுத்தி வைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பானது, பதவிக்கான தகைமையீனம் அல்லது பதவி இழப்பு அல்லது ஓய்வூதியங்கள் அல்லது வேறு நன்மைகள் இழப்பிக்கப்படுகை அல்லது இடைநிறுத்துகை என்பவற்றுக்கு ஏற்பாடு செய்கின்ற ஏதேனும் சட்டம் தவிர்ந்த சட்டம் எதனதும் நோக்கத்துக்காக மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றாகவிருப்பதாகக் கொள்ளப் படுதல் வேண்டும்.

(9) உட்பிரிவு (13) இன் கீழ் முழுமையாக நிறுத்திவைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்பபு முழுவதையும் அல்லது அதன் பாகத்தை அனுபவிக்கும்படி தவறானரொருவருக்குக் கட்டளையிடப்படின், அப்போது, பதவிக்கான தகைமையீனம் அல்லது பதவி இழப்பு அல்லது ஓய்வூதியங்கள் அல்லது வேறு நன்மைகள் இழப்பிக்கப்படுகை அல்லது இடை நிறுத்துகை என்பவற்றுக்காக ஏற்பாடு செய்கின்ற ஏதேனும் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவ்வுட்பிரிவின் கீழ் கட்டளை ஆக்கப்பட்ட நாளன்று தவறாளர் மறியற்றண்டனைத் தீர்ப்பு அளிக்கப் பட்டுள்ளவரெனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(10) உட்பிரிவுகள் (8), (9) என்பவற்றின் நோக்கங்களுக்காக சட்டம் என்பது, பாராளுமன்றத்தின் சட்டவாக்கம் ஏதேனும் பாராளுமன்ற சட்டவாக்கத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள், விதிகள், துணை விதிகள், ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகள் மற்றும் அமைச்சரவையினால் ஆக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்டக்கோவைகள் அல்லது வதிகளை உள்ளடக்கும்.

(11) எந்தத் தவறுக்கான நியதிச் சட்டமுறையான தண்டம் மறியற்றண்டனையாகவுள்ளதோ அல்லது அதனை உள்ளடக்கு கின்றதோ அந்தத் தவறுக்காக நீதிமன்றமொன்று ஆளொரு வருக்குக் குற்றத்தீர்ப்பளிப்பின் அத்துடன் அந்தத் தவறு இன்னொரு தவறு தொடர்பான தொழிற்படு காலப்பகுதியின் போது புரியப்பட்டிருப்பின், ஏதேனும் நீதிமன்றம் (13) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாளுக்கெதிராக நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(12) (அ) எந்தத் தவறுக்கான நியதிச் சட்டமுறையான தண்டம் மறியற்றண்டனையாகவுள்ளதோ அல்லது அதனை உள்ளடக்குகின்றதோ அந்தத் தவறுக்காக ஆளொருவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின், அத்துடன் அந்தத் தவறானது இன்னொரு தவறு தொடர்பான தொழிற்படு காலப்பகுதியின் போது புரியப்பட்டிருப்பின், அப்போது, அக்கருமங்களைச் சார்த்தி, மற்றைய தவறு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை விதித்த நீதிமன்றத்துக்கு முறைப்பாடொன்று செய்யப்படலாம்.

(அ) பந்தி (அ) வின் கீழான முறைப்பாடொன்று.

(i) வேறெவரேனுமாளினால்.

(ii) தொழிற்படு காலப்பகுதி முடிவுற்றதிலிருந்து இரண்டாண்டுகளுக்குப் பிந்தாமல்.

செய்யப்படலாம்.

(இ) பந்தி (அ) வின் கீழான முறைப்பாடொன்று எதுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், முறைப்பாட்டாளரிடமிருந்தான சத்தியக் கடதாசியொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(ஈ) சத்தியக்கடதாசியினால் ஆதாரபபடுத்தப்பட்ட எமுத்திலான முறைப்பாடொன்று (அ) என்னும் பந்தியின்கீழ் நீதிமன்றத்தினால் பெறப்படின், எந்த ஆள் தொடர்பில் நீதிமன்றம் நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பை விதித்துள்ளதோ அந்த ஆளையும், (அ) என்னும் பந்தியின்கீழ் முறைப்பாட்மைச் செய்கின்ற ஆளையும், குறித்துரைக்கப்பட்ட ஓர் இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் அதன் முன்னர் தோன்றும்படி அது கட்டளைவிட்டழைத்தல் வேண்டும்.

(உ) பந்தி (ஈ) இன் கீழ் ஆளொருவருக்கு வழங்கப்பட்ட அழைப்புக்கட்டளை அந்த ஆளுக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது அந்த ஆள் கடைசியாக வசித்ததாக அறியப்பட்ட இடத்தில் விட்டுவிடப்படல் வேண்டும்.

(ஊ) பந்தி (ஈ) இன் கீழ் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும்படி கட்டளைவிட்டழைக்கப்பட்ட எவரேனுமாள், அழைப்புக்கட்டளைக்கு இணக்கமாக நீதிமன்றத்தில் தோன்றுவதற்குத் தவறுவாராயின், அவரைக் கைது செய்து அதன் முன்னர் கொண்டுவருவதற்கு நீதிமன்றம் பிடியாணையொன்றை வழங்குதல் வேண்டும்.

(13) (அ) பன்னிரெண்டாம் உட்பிரிவின் கீழான முறைப்பாட்டின் கேட்பின்மீது, எந்த்த தவறுக்கான நியதிச்சட்டமுறையான தண்டம் மறியற்றண்டனளயாகயுள்ளதோ அல்லது அதனை உள்ளடக்குகின்றதோ அந்தத் தவறுக்கு

ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரென்றும், எந்தத் தவறு தொடர்பில் நீதிமன்றம் நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத் தீர்பபொன்றை விதித்துள்ளதோ அந்தத் தவறு தொடர்பான தொழிற்படு காலப்பகுதியின்போது தவறானது புரியப்பட்டதென்றும் நீதிமன்றம் திருப்திப்படின், நீதிமன்றமானது, (7) ஆம் உட்பிரிவில் எது எப்படியிருப்பினும், -

(i) நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பை அல்லது பகுதியளவிலான தண்டனைத்தீர்ப்பை மீட்டு அதனை அனுபவிக்கும்படி தவறாளருக்குக் கட்டளையிடலாம் ; அல்லது

(ii) நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பின் பாகத்தை அல்லது பகுதியளவிலான அண்டனைத்தீர்பபை மீட்டு அதனை அனுபவிக்கும்படி தவறாளருக்குக் கட்டளையிடலாம் ; அல்லது

(iii) முழுமையாக நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின் விடயத்தில், கட்டளைத்தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதிக்குத் தொழிற்படு காலப்பகுதியை நீடிக்கலாம் ; அல்லது

(iv) நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பு தொடர்பில் கட்டளையெதனையும் ஆக்காதிருக்கலாம்.

அத்துடன் சேர்ந்து அத்தகைய ஆளின்மீது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றை விதிக்கலாம்.

(ஆ) நிறுத்திவைக்கப்பட்டுள்ள மறியற்றண்டனைக் காலத்தை அனுபவிக்கும்படி நீதிமன்றம் தவறாளர் ஒருவருக்கு (அ) என்னும் பந்தியின்கீழ் கட்டளையிடின், அக்காலமானது, நீதிமன்றம் வேறுவகையாகக் கட்டளையிட்டாலொழிய.

(i) உடனடியாக அனுபவிக்கப்பதல் வேண்டும் ; அத்துடன்

(ii) தவறாளர் அனுபவித்துக்கொண்டிருக்கும் அல்லது அனுபவிககவுள்ள வேறேதேனும் மறியற்றண்டனைக் காலப்பகுதியுடன் ஒருங்கியைபாக உட்படுத்தப் படுதல் வேண்டும்.

(இ) ஏதேனும் பின்னரபன தவறு பற்றிய நிகழ்வு உட்பட, நிறுத்திவைக்கப்பட தண்டனைத்தீர்ப்பு விதிக்கப்பட்டதிலிருந்து எழுந்துள்ள அல்லது அறியவந்துள்ள எல்லாச் சூழ்நிலை களினதும் நோக்கில் (13) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தி யின் (i) ஆம் (ii) ஆம் அல்லது (iii) ஆம் உட்பிந்தியின்கீழ் நீதிமன்றம் கட்டளையொன்றை ஆக்குதல் அநீதியானதாக விருக்குமென நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டாலொழிய, அவ்வாறாக்குதல் வேண்டுமென்பதுடன், அது அந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பின், நீதிமன்றமானது அதன் காரணங்களை எழுத்தில் கூறுதலும் வேண்டும்.

(ஈ) உட்பிரிவு (12) இன் கீழ் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் தவறாளருக்கெதிராக உடனடியாக நடவடிக்கை யெடுப்பதற்கு நீதிமன்றத்துக்கு இயலாதிருப்பின், அது விதிக்கக் கூடியவாறான அத்தகைய நியதிகளின் மேல் பிணையின்மீது அவரை விடுதலை செய்தல் வேண்டும்.

கட்டளையின் பயனை நீதிமன்றம் தவறாளருக்கு விளக்குதல்.

304. மறியற்றண்டனைத் தீர்பபொன்றை நிறுத்திவைக்கின்ற கட்டளையை ஆக்குவதற்கு உத்தேசிக்கின்ற நீதிமன்றமொன்று, அத்தகைய கட்டளையை ஆக்குன்னர்

(அ) (i) உத்தேசிக்கப்பட்ட கட்டளையின் நோக்கத்தையும் பயனையும் அத்துடன்

(ii) தொழிற்படு காலப்பகுதியின்போது மறியற்றண்டனையினால் தண்டிக்கப் படற்பாவதான இன்னுமோர் தவறைத் தவறாளர் புரிந்தால் எழக்கூடிய விளைவுகளையும்

தவறாளருக்கு உடனும் விளக்கக்கூடிய ஒரு மொழியில் விளக்குதல் வேண்டும் அல்லது விளக்குவித்தல் வேண்டும்

(ஆ) தவறாளரை அடையாளம் காண் பதற்காகவும் அவரின் கைவிரலடை யாளங்களை எடுப்பதற்காகவும் கட்டளை யொன்றை ஆக்குதல் வேண்டும்.

*3* முதன்மைச் சட்டவாக்கத்தின் 305 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 305 ஆம் பிரிவை நீக்குதல்.*

*4* இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*